ஆசையடங்கக் கைத்தாருமே-மாசறலிஞ்
சும்மாவிருக்குமுடிச் சோதியடிநிழனடுச்
சும்மாவிருக்குஞ் சுகம். 27

இளவேனில். கட்டளைக்கலித்துறை.

இரும்பிறைக்கும்பொன்னிதழிக்கு மாமுடியாரொற்றிசூழ்ந்
தரும்பிறைக்கும்பொழின்மாங் குயிலோடணியார்கடற்கும்
கரும்பிறைக்குங்குடை வெண்பிறைக்கும்வடக்காங்கதிக்கா
றிரும்பிறைக்கும்வலிக்கும் மிளவேனிற்றுணைசெய்ததே. 28

நேரிசைவெண்பா.

செய்கைமுற்றுந்தவமே தீவகத்தாலானாலும்
உய்கைக்குறுதி யுன்கழலே - மெய்யுருவெட்
டாயினையேகச்சியரசே யெவன்வேறு
பேயனையேனெண்ணியது பேசு. 29

நேரிசைவெண்பா.

பேசும்பொருளுக்கிலக்கிதமாம் பேச்சிறந்த
மாசின்மணியென்றமாணிக்க - வாசகமாந்
தெள்ளமிழ்தைச்சுவைத்தசீர்ச்செவிக் கென்னொற்றியப்பா
கள்ளமொழியேறுமோகாண். 30

வெறிவிலக்கு - கட்டளைக்கலித்துறை.

காணீரிவ்வேளைக் கரும்புகைமிக்குச் செய்கண்கலக்கம்
வீணீரம்மையை யழிப்பீ ரிதென்வெறி யாட்டன்னைமீர்
பூணீர்மகிழ்க்கம்பர் பூங்களவேனும்புனையுமவர்
தோணீர்வலம்புரி யேனுங்கொணர்மின்சுகந்தருமே. 31

மாலைகண்டிரங்கல் - வெளிவிருத்தம்.

கருமேயிதழித்தார் கொடுவந்தத்தாராவே
அருமேகாம்பர முடையாரவரருளாராவே
லுருமேறென வேதாரிசைசெய்யுமூராவே
வருமேயளவியன் மலையெக்கொடுமைபின்வாராவே. 32

கார்கண்டுகவலல் - அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கொடியார்வளராக் குயிலினத்து மயிலினினங்கள்குளிர்தூங்க
விடியார்வளராக்குயிலினத்தாலினைந்தநாள்போயினமும்பொற்
றொடியார்க்கிடுக்கண்செயத்தோன்றித் தோன்றிநின்றமாமகிழ்வாழ்
அடியார்க்கினியாரன்பர்பாசறைக்கு மாங்கொலவையம்மா. 33

இன்றுமாதரராயென்னினைன் தென்செய்தாயினைவாய்
ஒன்றுபாதியாய்ச்செய்வதில் வல்லமையுடையான்
என்றறிந்துனார்மாமகி ழாளிசீரிசைத்தல்
நன்றுகேட்டிலைபச்சை மாலுமைசெயனயந்தே. 98

செவிலிகவறல்-இரட்டையாசிரியவிருத்தம்-மடக்கு

பச்சைப்பெண்ணின்பங்குடையார்-பச்சைப்பெண்ணின்பங்குடையார்
பணிவாரணியாரன்பாலே-பணிவாரணியாரின்பாலே.
விச்சைநட்டாருலகுயவ-விச்சைநட்டார்விட்டாரே
வேழவுரியார்முன்வில்லாம்-வேழவுரியார்கிளிந்தாரே.
கச்சையரவமேபூணவாங்-கச்சையரவமேமாதர்
கருத்துசுகமஞ்சவழகரெங்கள்-கருத்துக்கமஞ்சவருள்கண்ணார்
பிச்சையெடுப்பர்மனைதோறும்-பிச்சையெடுப்பரெம்முனைத்தே
பேரிற்பெரியமாகிழார்-பேரிற்பெயராப்புகழாரே. 99

இரட்டையாசிரியவிருத்தம்.

புகழமாமகிழாற்களவிருந்தார் புனைமரம்மலைவாழையைவாழப்
பொருவில்காஞ்சிப்பலதளியும் போற்றநாகமாக்கமுகு
மிசைச்சேரிஞ்சிநொச்சியொரு மூன்றும்வேவமூவாசு
மேவக்கடைகாலீர்க்குக்கோல் பிண்டுவங்கிச்சில்முகமாத்
தகவேவிருந்தார்மகத்தக்கன் றலையைக்கொய்யாநாரத்தைத்
தலைமேற்றழைப்பவத்திய தடாங்கி*யெமக்குக்கதலியதாம்
வகையானைக்காகுரக்குக்கரவைத்தீஞ்சமைத்தார்காடாடன்
மதித்தார்விகிர்தவேடரன்றோ வாழியலர்பொன்வணப்புகழே. 100

வாழ்த்து-ஒருபொருண் மேன்மூன்றடுக்கிய வொள்ளத்தாழிசை

வாழியர்வாழியா வாழியர் வாழியா
ஏழுவர்மாமகிழீசர்கழலென்நும்
குழுமன்பரின்பத்துட்டொக்கு.
மங்களமங்களமங்களமங்களம்
இங்கிதமாமகிழீசர்கழலென்றும்
பொங்குலகமின்பம்பொலிந்து
சோபனஞ்சோபனஞ்சோபனஞ்சோபனம்
ஈபவின்பமாமகிழீசர்கழலென்றும்
தாபமற்றவான்வழக்கந்தந்து. 101

மங்களம்-இறுதியிற்கூன்பெற்றுவந்தவஞ்சித்துறைகள்.

தந்திரச்சீர்மறை
செந்தமிழ்மாமுறை
சந்ததமேத்தெந்தை

